அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல 05/97 (vii)

எனது இல தா/7/4/1/2
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07,
2004.08.19 ஆந் திகதி.

அமைச்சுக்களின்
செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதம
செயலாளர்கள் மற்றும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

அரச அலுவலர்களுக்காக காப்புறுதித் திட்டமொன்றை ஏற்படுத்தல் (அக்ரஹார)

2004 ஆண்டிற்காக பின்வரும் திருத்தங்களுடன் அக்ரஹார காப்புறுதி திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

1. வெளிப்புறச் சிகிச்சைகள் மற்றும் மூக்குக் கண்ணாடிகளுக்கான செலவுகளை மீளளிப்புச் செய்வதை ‘க்குதல்.

11. விவாகமாகாத அலுவலர்களின் பெற்றோர் மட்டும் தங்கிவாழ்பவர்களாக கருதப்படுவதுடன் சகோதரர், சகோதரிகளை ‘க்குதல்.

02. மேற்காட்டப்பட்டுள்ள திருத்தங்களையும் கவனத்திற் கொண்டு 2004 ஆண்டிற்கான உரிமைக் கோரிக்கைகளை மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் பின்வரும் ஆலோசனைகளை கையாள வேண்டும்.

2.1 2004 சனவரி மாதம் 01 திகதி தொடக்கம் யூலை மாதம் 31 ஆந் திகதி வரையிலான கால எல்லைக்கு உரிய உரிமைக் கோரிக்கைகளை 2004 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன் மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

2.2 2004 ஆகஸ்ட் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான கால எல்லைக்கு உரிய உரிமைக் கோரிக்கைகளை குறித்த கோரிக்கை எழுந்த திகதி தொடக்கம் 90 நாட்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

2.3 உரிமைக் கோரிக்கைகள் உண்மையானவை அத்துடன் சரியானவை என்பதில் நன்கு திருப்தியடைந்த பின்னர் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

03. 2005 ஆண்டு தொடக்கம் காப்புறுதியாளர்களுக்கு கூடிய நலன்கள் கிடைக்கக் கூடியவாறு காப்புறுதித் திட்டத்தை மேம்படுத்துவதற்கான விடயங்களை கருத்திற் கொண்டு பார்ப்பதற்காக அலுவலர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. காலக்கிரமத்தில் அதுபற்றி கூடிய விபரங்கள் உங்களுக்கு அறிவிக்கப்படும்.

எஸ்.சீ.மான்னப்பெரும,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
செயலாளர்.